**முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், வேடசந்தூர்**
**O.S. 141/2003**
**நாள்.09.03.2026**
**பி.வா.சா.1- சுப்பிரமணி**
**த/பெ - ஆண்டவர்**

**வாதிகள் தரப்பில் குறுக்குவிசாரணை தொடர்ச்சி**

45. சுப்பையன் 1ம் பிரதிவாதியிடமிருந்து கிரையப்பத்திரம் எழுதி பெற்றபோது இருவரும் ஒன்றாக குடும்பம் நடத்தி வந்தார்கள் என்றால் சரியல்ல. சுப்பையன் பிள்ளைகளுக்கு எழுதபடிக்க தெரியாது என்றால் சரிதான்.

46. வழக்கு நிலுவையில் இருந்த போது தாவா சொத்துக்களை என் மனைவி பெயரில் கிரையம் பெற்றேன் என்றால் வழக்கு நிலுவையில் இருந்த விவரம் கிரையம் பெறும்போது தெரியாது. வழக்கு நிலுவையில் இருந்த விவரத்தை நன்கு தெரிந்துகொண்டு நாங்களும், 7,8 பிரதிவாதிகளும் கூட்டு சேர்ந்து கொண்டு பொய்யாக பத்திரத்தை உற்பத்தி செய்துள்ளோம் என்றால் சரியல்ல.

47. எனது மனைவி பெயரில் இருந்த பட்டாவை ரத்து செய்து ஏற்கனவே இருந்த சுப்பையன் பெயரில் பட்டா மாற்றம் செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான், எப்படி செய்தார்கள் என்று தெரியாது. **பட்டா எண்.2692 கணினி நகல், அது வா.சா.ஆ.5 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**

48. பி.வா.சா.ஆ 10 முதல் 12 வரையிலான ஆவணங்கள் பற்றிய விவரங்களை என் மனைவி தாக்கல் செய்த எதிர்வழக்குரையில் சொல்லவில்லை என்றால் சரிதான்.

49. பி.வா.சா.ஆ.1,3,5,9 ஆகிய ஆவணங்கள் அனைத்தும் அசல் ஆவணங்களாக இவ்வழக்கில் எங்கள் தரப்பில் தாக்கல் செய்யப்படவில்லை என்றால் அசல் ஆவணங்களை வேடசந்தூர் மாண்பமை சார்பு நீதிமன்றத்தில் நிலுவையில் உள்ள வழக்கில் தாக்கல் செய்துள்ளேன். அவ்வாறு சார்பு நீதிமன்றத்தில் அசல் ஆவணங்களை தாக்கல் செய்துள்ளதாக கூறுவது உண்மையல்ல என்றாலும், அந்த வழக்கிலும் சான்றிட்ட நகல்களை தான் தாக்கல் செய்துள்ளேன் என்றாலும் சரிதான்.

50. மேற்படி ஆவணங்கள் அனைத்தும் நடைமுறைக்கு வரவில்லை என்பதால் அந்த ஆவணங்களின் அசல் ஆவணங்கள் எங்கள் கைவசம் இல்லை என்றால் சரியல்ல.

51. வழக்கு நிலுவையில் உள்ளபோது எனது மனைவி பெயரில் ஏற்படுத்தப்பட்ட கிரையபத்திரம் சட்டப்படி செல்லத்தக்கதல்ல என்றாலும், அதன் பேரில் எந்த உரிமையும், உரிமை மூலமும் கோர இயலாது என்றால் சரியல்ல. மேற்படி நடைமுறைக்கு வராத ஆவணங்கள் பற்றி உண்மை நிலவரம் தெரியவரும் என்பதால் தான் எனது மனைவியையோ, 1ம் பிரதிவாதியையோ பிரதிவாதிகள் தரப்பில் விசாரிக்கவில்லை என்றால் சரியல்ல.

*Take down by me in open court and Read over to the witness and interpreted to him/her in Tamil and admitted by him/her to be correct*

B.Peter Digitally signed by B.Peter

**Principal District Munsif**
**Vedasandur**